


# முனைவர் ந.நடராச பிள்ளை




முனைவர் ந.நடராச பிள்ளை

# இரண்டாம்மொழி கற்பித்தல் அன்றும் இன்றும்




முனைவர் ந.நடராச பிள்ளை

முன்னாள் பேராசிரியர் மற்றும் துணை இயக்குநர்

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்

மைசூரு

13.3.2021

# அறிமுகம்

தாய்மொழி தவிர்த்துக் கற்றுக்கொள்ளும் எந்த மொழியும் இரண்டாம் மொழியே. [அயல்மொழி]

தற்கால மொழிக் கற்பித்தல் துறையைப் பொறுத்தவரை

இந்தக் கருத்தியல் கூடுதல் விளக்கம் பெறுகின்றது.

ஐரோப்பியரின் வருகைக்கு முன்னரும் இரண்டாம் மொழியாகக் கற்பித்தாலும் முறையான செயல் வடிவம் பெற்றது பின்னரே.

# ஐரோப்பியர் வருகையும் கற்பித்தலும்

- 16 முதல் 19-ஆம் நூற்றாண்டு வரையிலான காலக் கட்டத்தில் தமிழ் கற்பித்தல் இன்னொரு சிறப்பான ஒரு தளத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதற்கு ஐரோப்பியரின் வருகை காரணமாயிற்று.
- இராபர்ட் டி நோபிலி ''தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும். அதுவே ஒன்றிணைக்கும் பாலம்'' என்று கூறினார்.
- பின்னர் வந்த பாதிரிமார்களுக்கு அதுவே வேதமாயிற்று.
- பார்த்தலோமியு சீகன் பால்கு 1706 ஜூலை 9-ஆம் தேதி டேனிஷ் கிழக்கிந்தியாவின் ஆதிக்கத்திலிருந்த தரங்கம்பாடியில் வந்திறங்கினார். -தமிழ்ப்பள்ளிகள்

தமிழ் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படத் தொடங்கியது



1600- 1700 வரை எனக் கொள்ளலாம்

# மொழிக்கல்வி கருத்தியல்கள்

- இன்றையக் கல்வியில்…

  1. தாய்மொழி
  2. முதன்மொழி
  3. இரண்டாம் மொழி
  4. அயல் மொழி
  5. முன்னோர் மொழி


தாய்மொழி
இரண்டாம் மொழி
முன்னோர் மொழி
அயல் மொழி
முதல் மொழி

# தாய்மொழி

- வீட்டில் பேசுகிற மொழி -தாய்-தந்தையர் மொழி
- பலவேறுபாடுகள் உண்டு. [rule and exceptions]
- இங்கு வீட்டு மொழியே தாய் மொழி எனக் கொள்ளலாம்.
- வீட்டு மொழி தமிழாக இருந்தாலும் ஏதாவது ஒரு பேச்சு வழக்காக இருக்கும்.
- சமுதாய / வட்டாரப் பேச்சு வழக்கு
- நாம் கனவு காண்கிற மொழி தாய் மொழி.

# முதன்மொழி

- வீட்டு மொழி வேறாக இருந்தாலும் பள்ளியில் தமிழை முறையாகக் கற்கும்போது அது முதன்மொழி
- தமிழ் நாட்டில் தெலுங்கு, கன்னடம், மலையாளம், சௌரஷ்டிரம், உருது, மராத்தி, இந்தி, போன்றவை

  வீட்டுமொழியாக இருக்கின்றன.

  பள்ளியில் தமிழே முதல் மொழி. [விதி விலக்குகள்]
- கோத்தர், தோடர், ஊராளி, இருளர், போன்ற பழங்குடியினரும் படகரும்

  தமிழைக் கற்கலாம் அவர்களுக்கும் தமிழ் முதன்மொழியே

# இரண்டாம் மொழி

- தாய் மொழியைத் தவிர்த்துப் பின்னர்  கற்கின்ற மொழிகள் எல்லாமே இரண்டாம் மொழியே
- ஐந்து மொழிகள் கற்ற பிறகு இன்னொரு மொழி கற்றாலும் அது இரண்டாம் மொழியே.
- அயல் மொழி
- முன்னோர் மொழி
- இத்தனை வேறுபாடுகள்...
- எனவே, பாடத்திட்டமும் முறைகளும் உத்திகளும் வெவ்வேறாக அமைய வேண்டும்.
- அன்றும் இன்றும்  இக்கூறுகள் வேறுபடுவதை இங்குப் பார்க்கலாம்.

# கற்பித்தல் கற்றல் செயற்பாடு



# 1. பாடத்திட்டம்

1. நோக்கங்கள்- மாநிலம், நாடு [Aims] [எடுத்துக்காட்டாக]
2. குறிக்கோள்கள் – [Objectives]

   மொழித் திறன்கள் [Language skills]

   பாடப் பொருள் [Teaching learning materials]

3. பாடங்கள்- உள்ளடக்கம் வரிசை
4. பயிற்சிகள் [குறிக்கோள்கள் அடிப்படையில்]
5. தேர்வுகள் [பயிற்சிகளின் அடிப்படையில்]

# கல்விக்கொள்கைகள் 2016-17

- "குழந்தைகள் பல்வேறு துறைகளிலும் களங்களிலும் அறிவு வளர்ச்சிபெறச் சிறந்த கருவியாகத் திகழ்வது கல்வி. குழந்தைகளின் அறிவுக் கண்ணைத் திறந்து அறிவார்ந்த மனவெழுச்சி சமநிலை உடையவர்களாகவும் வாழ்வில் சமூகச் சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றல் மிக்கவர்களாகவும் கல்வி உருவாக்குகிறது."
- [பக்கம் 21 கல்விக்கொள்கைகள் 2016-17, தமிழ் நாடு அரசு]
- 37,459 அரசுப் பள்ளிகள் 8,357 அரசு மானியப் பள்ளிகள். இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது.

# திறன்கள்

- மொழி என்றால் என்ன? மொழியியல் பார்வை
  திறன்களின் தொகுப்பு- கூட்டு / விதிகளின் தொகுப்பு
- அடிப்படைத் திறன்கள்
  - உற்று நோக்கல்
  - கேட்டல்
  - பேசுதல்
  - வாசித்தல்
  - எழுதுதல்

-ஐம்புலன்கள்

- **உயர் திறன்கள்**

  கோர்வையாக / ஆற்றொழுக்காக எழுதுதல் /பேசுதல் / வாசித்தல்

  இணைவாக எழுதுதல்- வாக்கிய இணைப்புகள் [ஆனால், ஆகவே, எனவே, ஏனென்றால் ]
- பத்தியமைப்பு
- தாமாக எழுதுதல்---படைப்புத் திறன்
- திறன்களை முன்னிறுத்திய போது **மொழியியலின்** செல்வாக்கு இரண்டாம்மொழிகற்பித்தலில் வெளிப்படத்தொடங்கியது.

# ஸ்கின்னரின் கோட்பாடு

- ஸ்கின்னரின் வாய்மொழி நடத்தை [1957], தூண்டல் – துலங்கல்களால் [stimulus-response] கற்றுக்கொள்கிறோம் என்றும் திறன் வலியுறுத்தப்படவேண்டும் [reinforcement] என்றும் விளக்கியதே மறைவாக்காக அமைந்தது.
- இரண்டாம் மொழி கற்பித்தலும் அதே பாதையில் அடிஎடுத்து வைக்கத் தொடங்கியது.
- உரையாடல் பாடம், வாய்பாட்டுப் பயிற்சி [drills], எழுத்துப் பயிற்சி, அருஞ்சொற்பொருள், இலக்கணக் குறிப்பு, பண்பாட்டுக் குறிப்பு

# சான்றாக

- தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கவும் கற்கவும் படைக்கப் பட்ட நூல்களை எடுத்துக்காட்டுகளாக்கலாம். என்.குமாரசாமி ராஜா, மு சண்முகம்பிள்ளை, ம.சு.திருமலை,

  சு. இராசாராம், பொற்கோ, ந.தெய்வசுந்தரம்-கோபால், வ.ஞானசுந்தரம், ந. நடராச பிள்ளை, கி. கருணாகரன்,

  சாம் மோகன் லால், ஜி. சங்கரநாராயணன்,

  ர. வாசு, போன்றோரின் பாடநூல்கள்.
- அச்சு மட்டுமல்ல; மற்ற ஊடகங்களிலும் அவ்வாறே.
- வடிவங்களிலும் குறிக்கோள்களிலும் கூடுதல் மாற்றங்கள் இல்லை

# அமைப்பு மொழியியல்

- மொழியியலின் ஆய்வுகள்- ஒலியனியல், உருபனியல், உருப-ஒலியனியல், தொடரியல், உருப-தொடரியல், பொருண்மையியல்,

1. பாடநூலாக்கத்திற்கு, கற்பித்தல் முறைகளுக்கு
2. திறன்களின் வளர்ச்சிக்கு
3. இரண்டாம் மொழி இலக்கண உருவாக்கத்திற்கு

வழிவகுத்தன.

மொழியியலின் விளக்க ஆய்வுகளும், உளவியலின் 1957 பங்களிப்பும் செலுத்திய செல்வாக்கை இன்று வரை மாற்ற முடியவில்லை. மேற்சொன்ன நூல்களை மாற்றவோ, புது நூல்களை உருவாக்கவோ முடியவில்லை.

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன நூல்கள்

# பியாஜே- சோம்ஸ்கி 1965

- ஓர்தல் விதி பயில் கோட்பாடு - திருப்பித் திருப்பிச் சொல்வதால் மொழி நிறைவாகக் கற்றுக் கொள்ளப் படுவதில்லை. மொழியின் அமைப்பு விதிகளால் தான் கற்றுக்கொள்ளப்படுகின்றன என்பதே பியாஜேயின்- கோட்பாட்டு மாற்றம்.
- அமைப்பு மொழியியலிலிருந்து வேறுபட்டு சோம்ஸ்கியின் மாற்றிலக்கணம் உருவானது.
- இவ்விரண்டுமே புதிய பாடத்திட்டத்தைத் தரவில்லை. பயிற்சிகளிலும் மொழிகற்பித்தலின் முறைகளில் மட்டுமே ஆதிக்கம் செலுத்தின.

# மொழியியலின் வளர்ச்சி 20/21 –ஆம் நூற்றாண்டுகளில்

- விளக்க மொழியியல் Descriptive Linguistics
- உள மொழியியல் Psycho-Linguistics
- ஒப்பு மொழியியல் Comparative Linguistics
- சமுதாய மொழியியல் Socio-Linguistics
- உறழ்வு மொழியியல் Contrastive Linguistics
- பிழை ஆய்வு Error analysis

தொழில் நுட்ப வளர்ச்சி

- கணினி மொழியியல் Computational Linguistics
- தரவு மொழியியல் Corpus Linguistics
- இணையம்

எவ்வாறு உதவின

- கற்பித்தலுக்கான பாட நூல்கள்- (Textbooks)
- துணை நூல்கள் (Supplementary materials)
- தமிழ் எழுத்துகள் கற்பிப்பதில்  (Scripts)
- தமிழ் இலக்கணத்தின் அணுகுமுறையில் (Approach)
- வாக்கிய அமைப்புகளில்
- கற்றலில் தாய் மொழித் தாக்கம்

இவை புதிய பாதைகளை உருவாக்கின.

இரண்டாம் மொழிக்கல்வி வலுப்பெற்றது.

# விளக்க மொழியியல்

- எவற்றைக் கற்பிப்பது-

  பேச்சு வழக்கு / எழுத்து வழக்கு [புலம்பெயர் நாடுகளில்]

  வாக்கிய அமைப்புகள் [40-45]

  வாக்கிய வரிசை - ஒன்றிலிருந்து இன்னொன்றை உருவாக்குதல்

  நான் மாணவன்.

  நான் படித்தேன்.

  நான் படித்துத் தூங்கினேன்.
- சொற்கள் தெரிவு [1500] அடிப்படைச் சொற்கள்
- இலக்கண மாற்றங்கள்
- [ எடுத்துக்காட்டு-இறந்தகால இடை நிலைகள்]
- மரபிலக்கணத்திலிருந்து அணுகுமுறையில் சிறிது வேறுபட்டது

# இலக்கணம்- சில கூறுகள்

- முதன்மொழியாகக் கற்பிக்கும் போது இறந்த கால இடைநிலைகள்- த், ட், ற், இன். [நன்னூல், பகுபத உறுப்புகள்]
- இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் போது [கற்பித்தல் எளிது]
- த், ட், ற் [செய், உண், தின்]
- த்த், ற்ற், [படி, கல்]
- இன், ன், [பாடு, போ, சொல்]
- ந்த், ண்ட், ன்ற், [நட, ஆள், நில்]
- கணினிக்கும் இது தேவைப்படுகிறது.
- இடைநிலைகளைக் குறிக்க கிரியா அகராதியில்
- [ ‘செய’ வாய்பாட்டுவினையெச்சம்; வினையெச்சம்]

  [ படி--- படிக்க, படித்து]

# 2. கற்பித்தல் கற்றல் பாடநூல்கள்

a. முதன்மை நூல்கள் - b. துணை நூல்கள்

- ஊடகங்கள் அச்சு, ஒலி, ஒளி, பல்லூடகம், இணையம், யூடியூப்
- கொடுக்கப்பட்ட முக்கியத்துவம்
- வாக்கிய அமைப்புகள், A Guide for advanced learners of Tamil
- சொற்களஞ்சியம்- Classified vocabulary, Pictorial Glossary
- இலக்கணக் கையேடுகள்,
- படித்தல்: Newspaper Reader

# பாடப் பொருள்கள்

இன்றைய காலத்தில் ஊடகங்கள்

- அச்சு (print) [பாட நூல்]
- ஒலி (audio) [ஒலிநாடாச் சுருள்கள், வானொலி - குறுந்தகடுகள்]
- ஒளி (video) [ஆவணப்படங்கள், திரை/ தொலைக்காட்சிப் படங்கள்]
- காட்சி- visuals –animated [காணொளிகள்]
- பல்லூடகம் (Multimedia) [ +ஊடாட்டம்]
- இணையம் (on-line)

இவற்றிற்கு ஏற்றவாறு பாடங்களை உருவாக்குதல்

# இன்றைய தேவை

- இணையத்தில், குறிப்பாக, யூடியூப்
- அச்சுப் பாடங்களில் கவர்ச்சி இல்லை
- PPt- இல் ஆர்வம் இல்லை
- முழு கவனமும் சிறிய சிறிய /குறும் 10 நிமிடப் பாடங்கள் youtube- இல் தேவை. [புலம்பெயர் நாடுகளின் தேவை]
- கணினிக்கான இலக்கணம்
- அசைவுகளுடன் காணொளிகள்
- மின்பாடம், மின்னகராதி,
- கேட்டல், வாசித்தல் திறன்களை வளர்க்கும் பாடங்கள்
- மொழி விளையாட்டுகள்
- தமிழ் மொழியியல் சங்கம் எவ்வாறு துணை நிற்கலாம்

# 3. ஆசிரியர்களுக்கான தகுதித் திறன்கள்

- கற்பித்தல் முறைகள்-
- 1. இலக்கண மொழிபெயர்ப்பு முறை
- 2. நேர்முக முறை
- 3.கேட்டுப்பேசல் முறை- இதுவே இன்றுவரை ஆதிக்கம்
- 4. ஓர்தல் விதி பயில் முறை
- 5. தகவல் தொடர்பு முறை

மொழி தகவல் தொடர்புக்கானது- இலக்கணம் தேவை இல்லை, வாக்கியம் படியமைப்பு செய்யத் தேவை இல்லை.

சூழல் மொழிப் பயன்பாட்டு முறை தேவை [Pragmatics]

# 4. மாணவர்- கற்றல்

- கற்றல் கோட்பாடுகள் [1957 and 1965]
- தேவையான உத்திகள் [ஒலிப்பு]
- பயிற்சிகள், படைப்புத் திறன்
- உறழ்வு ஆய்வின் கோட்பாடு- இரு மொழிகளுக்கு இடையிலான வேறுபாடுகளே சிக்கல்களுக்குக் காரணம்
- பிழைகள்

  மொழியியல், உளவியல்,
- தாய்மொழி இடையீடும் மனப்பான்மையும்
- காரணங்களும் சீர்படுத்துதலும்

# மதிப்பீடு

- மதிப்பீடுகள் பல வகைப்படும்

  1. பாடநூல் மதிப்பீடு, 2. ஆசிரியர் மதிப்பீடு,

  3. மாணவர் மதிப்பீடு
- மாணவர்களின் அடைவை மதிப்பீடு செய்யும் போது நெடுங்காலமாகவே பயனில் உள்ள 'புளூமின் வகைப்பாடு'
- அறிவுக்களம் [cognitive domain]
- உணர்வுக் களம் [Affective domain]
- செயற்பாட்டுக் களம் [Psycho-motor domain]
- [மு. பாலகுமாரின் கையேடுகள்]

# அறிவுக்களம்

### ப்ளூம்

- மதிப்பிடல்
- தொகுத்தல்
- பகுத்தல்
- ஆளல்
- புரிதல்
- அறிதல்

### ஆண்டர்சன்

- ஆக்கல்
- தொகுத்தல்
- பகுத்தல்
- ஆளல்
- புரிதல்
- நினைதல்



செய் வினை- செயப்பாட்டு வினை வாக்கியங்கள்

# கணினி மொழியியல்- இன்றைய மாற்றம்

- Tagging is, usually, understood to mean ‘POS tagging’,
- சொல்வகை விளக்கல்

  சொல்வகை விளக்கி [அடையாளப்படுத்தி]

பெயர்ச் சொல், வினைச் சொல்,பெயரடை, வினையடை, என சொற்களை அடையாளம் காணல்.

இரண்டாம் மொழி கற்போருக்கு மிகத் தேவையானது

அழகான, அழகாக, படி, படித்து, படித்தல், படிப்பு,

- வாக்கியத்தின் ஒவ்வொரு சொல்லையும் விளக்கல்
- ஒரு பனுவலுக்கு வடிவம் கொடுப்பதற்கு அடிப்படையாக அமைவது

# இணையம்

இணையம் இல்லை எனில் வாழ்வே / ஆய்வே இல்லை.

அறிவு, தகவல் கடல்  [ctrl- c and ctrl-v]; [ google trans]

இணையம் வழி கற்றல் - கற்பித்தல் [Online education]

கொரோனாவால் நடந்த புரட்சி.

இந்த ஊடகங்களின் ஆற்றல்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

# இன்றைய தேவை

- எதிர்நோக்கும் மாற்றங்கள்
- பாடநூல் வடிவமைப்பு
- பயிற்சிகள்
- தேர்வுகள் [மனப்பாடத்தைமுன்னிறுத்த்லாகாது (NEP 20-21)
- பிழைகளை நீக்குதல்/ திருத்துதல்
- இணையத்தின் பயன்பாடு/ யூடியூப்
- மொழிபெயர்ப்பின் பங்களிப்பு

# கணினி வழி

- மொழிபெயர்ப்பு
- அகராதி உருவாக்கம்
- உருபனியல் பகுப்பாய்வி
- தொடர் பகுப்பாய்வி
- பிழைதிருத்தி
- இலக்கணம் திருத்தி
- [பேரா. தெய்வ சுந்தரம், பேரா. எல். இராமமூர்த்தி, போன்றோரின் பங்களிப்பு]

முடிவாக,

இது ஒரு தொடக்கமே!

ஆர்வமுள்ளவர்கள் தொடர வேண்டும்.

அனுபவம் உள்ளவர்கள் வழிகாட்ட வேண்டும்.

இது மரபிலிருந்து அறிவியல் நோக்கில் பயணம்.

பயணங்கள் முடிவதில்லை.

# எல்லோருக்கும் நன்றியும் வாழ்த்துகளும்

nadarajapillai53@gmail.com
9108894030

தேடலே குறிக்கோள்



# ஒப்பு மொழியியல் - மொழிக்குடும்பம்

- மொழிக்குடும்பங்கள் [இந்தியாவில் 4]

- தமிழ் – பயில் மொழி
- மலையாளம், கன்னடம், தெலுங்கு திராவிட மொழிக் குடும்பம்.
- இந்தி, வங்காளி, பஞ்சாபி, ஆரிய மொழிக்குடும்பம்
- மணிபுரி, திபத்தோ- பர்மிய மொழிக்குடும்பம்
- சந்தாலி – முண்டா மொழிக்குடும்பம்

- ஆங்கிலம், பிரெஞ்சு இந்தோ ஐரோப்பிய மொழிக்குடும்பம்

# ஒப்பு மொழியியல்

- மொழிக்குடும்பங்கள்

  ஒற்றுமைகள்- வேற்றுமைகள்- சில

  1. பெயர்ப்பதிலிகள்- தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு

  2. வாக்கிய அமைப்புகள்

  3. ஒலிப்பு ...... உருபன் மாற்றங்கள் [அவன் வந்தான்]

  ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள்

எளிதாகக் கற்க உதவுதல்

வேறு மொழிக்குடும்பம்- voh – அவன், அவள், அது

vee – அவர்கள், அவை

# உறழ்வு மொழியியல்

- இரு மொழிகளுக்கிடையிலான வேறுபாடுகள்
- அவை சிக்கல்களை முன்னரே தரும்
- SOV      எழுவாய் - செ.பொருள் - வினை
- SVO      எழுவாய்- வினை - செ.பொருள்
- அவன் வந்தால் நானும் வருவேன்
- If he comes, I will also come.
- Yadi tum aaye to mai bhi aavuunga [Hindi]
- ல், ள், ழ்/   ர், ற்/   ன், ண்/
- வேறுபடுகள் பிழை செய்யத் தூண்டும் என்பது ஊகம்.

# பிழை ஆய்வு

- உறழ்வு மொழியியலுக்கு எதிரானது
- மாணவர் செய்யும் பிழைக்கான காரணங்கள் வேறென்றது.
- ஒரு சில எடுத்துக் காட்டுகள்

| | |
|---|---|
| 1. பொதுமைப்படுத்தல் | bring- brought; spring- ……. |
| 2. தாய் மொழி இடையீடு | நான் சொல்லுறேன்.. அவள் வருவாள் [என்று] |
| 3. எளிமையாக்கம் | மார்வாடியின் தமிழ் |

# சமுதாய மொழியியல்

## தமிழ் வழக்குகள்

- இரட்டை வழக்கு மொழி – பேச்சு- எழுத்து [பொதுமைப் பேச்சு]
- எதை முதலில் கற்பிக்க வேண்டும்
- பேச்சிலிருந்து எழுத்து வழக்கிற்கு மாறும் விதிகள்

  எழுத்து வழக்கிலிருந்து பேச்சுக்கு….
- பேச்சே அடிப்படை – எழுதுதல் இரண்டாவதே
- பள்ளிக்கல்வியில் எழுத்து வழக்கு என்பது  முதல் மொழியாகக் கற்பிப்பதற்கு.
- [அயல் நாடுகளில் பேச்சு வழக்கே தேவை.
- எ,கா. தென் ஆப்பிரிக்கா]

# தொழில் நுட்ப வளர்ச்சி

- கணினி வழி கற்றல்- கற்பித்தல்
- CALT, CALL
- பல்லூடகம்  [Multimedia]
- [சிங்கப்பூர் -செந்தமிழ் வரிசை, மொரிசியசு - பாலதரங்கிணி, உ.த.ஆ. நிறுவனம்- 'தமிழ் உலகம்']
- எழுத்துத் திருத்தி  [Spellcheck],   [ பேரா. ந. தெய்வசுந்தரம்]
- இலக்கணம் திருத்தி [Grammar check]
- இவ்விரண்டிற்கும் மொழிப்பயன்பாடு, இலக்கண அறிவு, பிழைகள் பற்றிய அறிவு, மொழியியல் அறிவு, போன்றவை தேவை

# இணையம்

இணையம் இல்லை எனில் வாழ்வே / ஆய்வே இல்லை.

அறிவு, தகவல் கடல் [ctrl- c and ctrl-v]; [ google trans]

இணையம் வழி கற்றல் - கற்பித்தல் [Online education]

இந்த ஊடகத்தின் ஆற்றல்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கொரோனாவால் நடந்த புரட்சி.

# இரண்டாம் மொழி- மாணவர்

1. மாணவரின் தாய் மொழி
2. தாய்மொழியும் பயில் மொழியும் ஒரே குடும்பமா? வேறா?
3. மாணவரின் தேவை என்ன?
4. மாணவர் எங்குக் கற்கிறார்? [நாடு - மாநிலம் - தமிழ் நாடு]
5. வகுப்பறையா ? வேறு ஊடகமா? இணைய வழியா?

   மாணவர் எந்த ஊடகம் வழி கற்க விரும்புகிறார்?

- எனவே, பாடத்திட்டமும் முறைகளும் உத்திகளும் வெவ்வேறாக அமையும்; அமைய வேண்டும்.
- மாணவரை மையப்படுத்திய கல்வி.

# தாய்மொழி இரண்டாம் மொழியான கதை

- மொரிசியசு- வீட்டு மொழி கிரியோல். தமிழ் முன்னோர் மொழி... வகுப்பறையில் மட்டுமே பயனாதல்
- கோவில்களில் பக்தி மொழி [ பண்பாட்டு மொழி]
- அதனால் இரண்டாம் மொழி போல இருக்கிறது.
- சிங்கப்பூர் தாய் மொழிக்கல்வியே ஆனால் சிறிது சிறிதாக

  மாறிவருதல்.

  மற்ற நாடுகளிலும்....... நிலைமை கவலைக்கிடமே!!!!!!??

  ஆனாலும் ‘தொலைவில் ஓர் ஒளிக்கீற்று’

# நிறுவனங்கள்

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூரு

செம்மொழி மத்திய நிறுவனம், சென்னை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

ஆசியவியல் நிறுவனம், சென்னை

அமெரிக்கன் நடுமம், மதுரை

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

புதுவை மொழியியல்-பண்பாட்டு நிறுவனம், புதுவை

பிரெஞ்சு நிறுவனம், புதுவை

# தேவையும் எதிர்பார்ப்பும்

மாணவர்களிடமிருந்து எதை எதிர்பார்க்கிறோம்?

1. மொழித் திறன்கள் வளர்ச்சி
2. பாடப் பொருள் அறிவு
3. பயன்பாட்டு இலக்கண அறிவு
4. சமுதாயத் தேவை.

# மொழி நிலைகள்

- எழுத்துகள் [ வரிவடிவங்கள்] ஒலியனியல்
- சொல்லியல் உருபனியல்
- புணரியல் உருப-ஒலியனியல்
- தொடர்கள் தொடரியல்
- உருபும் தொடரும் உருப-தொடரியல்

- பொருள் [பொருண்மை] பொருண்மையியல்
- சூழல்பயன்பாட்டியல்

# வினை வகைகள்

- செயப்படுபொருள் குன்றிய வினை
- ………………….. .. குன்றா வினை
- தன் வினை
- பிற வினை
- இணைப்பு வினை [ஆகும்]
- இவற்றோடு
- வல்வினை [படி, பார், குடி, கொடு, நட …]
- மெல்வினை [எழுது, பேசு, பாடு, செய், வளர்..]

# தொழில் நுட்பம்

- மொழிப்பயிற்சிக் கூடம்
- வாசித்தல் கருவிகள்
- **கணினி**
- மொழிபெயர்ப்பு
- அகராதி உருவாக்கம்
- சொல் அடையாளப்படுத்தி [POS tagging]
- உருபனியல் பகுப்பாய்வி
- தொடர் பகுப்பாய்வி
- பிழைதிருத்தி
- இலக்கணம் திருத்தி

# இரண்டாம் மொழி

- எதில் வேறுபாடு? எவ்வாறு?
- கற்பித்தல்   முறைகள்
- ஊடு மொழி எது
- சூழல் மொழிப்பயன்பாடு [Pragmatics]
- கட்டுப்பாடுகள் – [படைப்புத்திறனில்]
- மொழிப்பயிற்சிக்  கூடங்கள்
- பிழை வகைகள்  [ வாளப்பளம்]
- தொலைக் கல்வி- [அஞ்சல் வழி]
- இணையம் வழி கற்பித்தல்

- வல்லினம் க ச ட் த ப ற்
- மெல்லினம் ங் ஞ் ண் ந் ம் ன்
- இடையினம் ய் ர் ள் ழ் வ் ல்

# அறிவு மேலாண்மை



மொழி திறன் - அறிவு



திறன் வளர்ச்சிக்குத் தொழில் நுட்பம்



இலக்கியங்கள்- வகைகளும் அறிவும்



கற்பித்தல்- பயிற்சி அளித்தல்



சிக்கல் தீர்த்தல் பிழை திருத்தல்



புத்தறிவுக்கு இணையம்